www.Padasalai.Net www.TrbTnpsc.com

ASS

# முழு ஆண்டுப் பொதுத்தேர்வு – 2025

9 - ஆம் வகுப்பு

## அறிவியல்

நேரம் : 3.00 மணி | மதிப்பெண்கள் : 75

### பகுதி - அ

**I அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 12 X 1 = 12

1. கீழ்க்கண்டவற்றுள் எது நிறையை அளவிடும் கருவியல்ல
   அ) சுருள் தராசு ஆ) பொதுத் தராசு
   இ) இயற்பியல் தராசு ஈ) எண்ணியல் தராசு
2. நீரில் மூழ்கியிருக்கும் காற்றுக் குமிழி மேலே எழும்பும் போது, அதன் அளவு
   அ) குறையும் ஆ) அதிகரிக்கும்
   இ) அதே அளவில் இருக்கும் ஈ) குறையும் அல்லது அதிகரிக்கும்
3. பெரிதான, மாயபிம்பங்களை உருவாக்குவது ........ .
   அ) குழியாடி ஆ) குவியாடி இ) சமதள ஆடி
4. நியூக்ளியான் குறிப்பது
   ஆ) புரோட்டான் + எலக்ட்ரான் ஆ) நியூட்ரான் மட்டும்
   இ) எலக்ட்ரான் + நியூட்ரான் ஈ) புரோட்டான் + நியூட்ரான்
5. வேதிவினைகளில் எலக்ட்ரானை ஏற்று எதிர் அயனியாக மாறக் கூடிய தனிமம்
   அ) பொட்டாசியம் ஆ) கால்சியம் இ) புளூரின் ஈ) இரும்பு
6. ஒரு தனிமம் வேறுபட்ட அமைப்பையும், ஒரே மூலக்கூறு வாய்ப்பாட்டையும் கொண்டிருப்பது
   அ) மாற்றியம் ஆ) புறவேற்றுமை வடிவம்
   இ) சங்கிலித் தொடராக்கம் ஈ) படிகமாக்கல்
7. பின்வருவனவற்றுள் எது இயற்கைச் சாயம் இல்லை?
   அ) உருளைக்கிழங்கு ஆ) பீட்ரூட் இ) கேரட் ஈ) மஞ்சள்
8. மீசோகிளியா காணப்படுவது
   அ) துளையுடலிகள் ஆ) குழியுடலிகள் இ) வளைதசையுடலிகள் ஈ) கணுக்காலிகள்
9. ஏரென்கைமா எதில் கண்டறியப்பட்டது
   அ) தொற்று தாவரம் ஆ) நீர்வாழ் தாவரம் இ) சதுப்பு நில தாவரம் ஈ) வறண்ட தாவரம்
10. பித்த நீர் .......... செரிக்க உதவுகிறது
    அ) புரதங்கள் ஆ) சர்க்கரை இ) கொழுப்புகள் ஈ) கார்போஹைட்ரேட்டுகள்
11. மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்படும் உறுப்பு
    அ) கல்லீரல் ஆ) நுரையீரல் இ) சிறுநீரகம் ஈ) மூளை
12. ஒரு விளக்கக் காட்சி என்பது பல ................. ஐ உள்ளடக்கியது
    அ) Pages ஆ) Slides இ) Placeholders ஈ) Message

### பகுதி – ஆ

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண். 22 கட்டாய வினா).** 7 x 2 = 14

13. மின்விசைக் கோடுகள் என்றால் என்ன?
14. பல்லை ஆராய பல் மருத்துவர்கள் குழியாடியை பயன்படுத்துகின்றனர் ஏன்?
15. நீயும் உனது நண்பரும் நிலவில் இருக்கிறீர்கள். உனது நண்பன் ஏற்படுத்தும் ஒலியை உன்னால் கேட்க முடியுமா?
16. பூமியில் உயிர் வாழ்வதற்கான காரணிகள் யாவை?
17. பின்வருவனவற்றுள் எவை தூய பொருட்கள்?
    பனிக்கூழ், பால், இரும்பு, ஹைட்ரோகுளோரிக் அமிலம், பாதரசம், செங்கல், மற்றும் நீர்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

18. அமிலங்களின் பயன்கள் ஏதேனும் நான்கினை எழுதவும்.
19. கொட்டும் செல்கள் என்றால் என்ன?
20. பின்வரும் வாக்கியங்களுக்கு ஏற்ப அறிவியல் சொற்களை எழுதுக.
அ) தாவரத்தில் வளர்ச்சி சார்ந்த அசைவுகள் ஆ) தாவரத்தில் வளர்ச்சி சாரா அசைவுகள்
21. கலப்படம் என்றால் என்ன?
22. கம்பியொன்றின் குறுக்கு வெட்டுப் பரப்பை 25 கூலும் அளவிலான மின்னூட்டம் 50 வினாடி காலத்தில் கடந்து சென்றால் அதனால் விளையும் மின்னோட்டத்தின் அளவு என்ன?

பகுதி - இ

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா 32 கட்டாய வினா).** 7 x 4 = 28

23. அ) ஃப்ளெம்மிங்கின் இடக்கை விதியைக் கூறுக.
ஆ) மின் மோட்டாரின் முக்கிய பகுதிகளைப் பட்டியலிடுக.
24. அ) மண் பானையில் வைத்திருக்கும் தண்ணீர் எப்போதும் குளிராக இருப்பது ஏன்?
ஆ) கோடை காலங்களில் மக்கள் ஏன் வெள்ளை நிற ஆடை அணிவதை விரும்புகிறார்கள்?
25. SONAR வேலை செய்யும் விதத்தினை விளக்குக.
26. **அ) பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1) மும்மை விதி | - | நியூலாந்து |
| 2) கார உலோகம் | - | கால்சியம் |
| 3) எண்மக் கோட்பாடு | - | ஹென்றி மோஸ்லே |
| 4) கார மண் உலோகம் | - | சோடியம் |
| 5) நவீன ஆவர்த்தன விதி | - | டாப்ரீனர் |

ஆ) நவீன ஆவர்த்தன விதியைக் கூறுக.
27. வேறுபடுத்துக : கிராஃபைட் மற்றும் வைரம்,
28. தட்டைப் புழுக்கள் மற்றும் உருளைப் புழுக்கள் இடையேயான வேறுபாட்டினைக் குறிப்பிடுக.
29. அ) நமக்கு ஏன் வியர்க்கிறது?
ஆ) மனித சிறுநீரகத்தின் ஏதேனும் இரண்டு முக்கிய பணிகளைக் குறிப்பிடுக.
30. அ) விரியான் மற்றும் வீரியாய்டு வேறுபடுத்துக.
ஆ) இரு சாதாரண கொசுக்கள் மற்றும் அவைகள் பரப்பும் நோய்களின் பெயர்களைத் தருக.
31. உன் பள்ளி, வீடு ஆகியவற்றில் நீரைச் சேமிக்கக்கூடிய சில வழிமுறைகளைப் பட்டியலிடுக,
32. தனிமத்தின் ஆக்ஸிஜனேற்ற எண்ணைக் கணக்கிடுக.
அ) $H_2O$ ல் H மற்றும் O ஆ) $H_2SO_4$ ல் S

பகுதி - ஈ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி. தேவையான இடங்களில் படம் வரைக.** 3 x 7 = 21

33. i) அ) அளவீடு என்றால் என்ன? ஆ) SI அலகுகளை எழுதும் போது கவனிக்க வேண்டிய விதி முறைகள் யாவை? *(அல்லது)*
ii) அ) கோளக ஆடிச் சமன்பாட்டை எழுதுக. அதில் பயன்படுத்தப்படும் குறியீடுகள் ஒவ்வொன்றையும் விளக்கு.
ஆ) பின்வரும் நிகழ்வுகளில் ஒளியானது விலகல் அடையும் விதத்தைப் படங்களை வரைந்து விளக்குக.
அ) அடர் குறை ஊடகத்திலிருந்து அடர்மிகு ஊடகத்திற்கு
ஆ) அடர் மிகு ஊடகத்திலிருந்து அடர் குறை ஊடகத்திற்கு
இ) இரு ஊடகங்களைப் பிரிக்கும் பரப்பிற்கு செங்குத்தாக
34. i) அ) நவீன தனிம அட்டவணையில் ஏதேனும் ஐந்து பண்புகளைக் குறிப்பிடுக. *(அல்லது)*
ஆ) பிணைப்பின் வகைகள் யாவை? *(அல்லது)*
ii) அ) மயக்கமூட்டிகள் என்றால் என்ன? அவை எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?
ஆ) பயன்பாட்டின் அடிப்படையில் சாயங்களை வகைப்படுத்துக.
35. i) அ) நிலைத்த திசுக்கள் யாவை? வெவ்வேறு வகையான எளிய நிலைத்த திசுக்களை விவரிக்க. (அல்லது) ii) அ) காய்கறித் தோட்டங்களின் வகைகள் யாவை? ஆ) தேனின் மருத்துவ முக்கியத்துவத்தைப் பட்டியலிடுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com